| | |
|---|---|
| **UG-022** | **BTM-21** |

# B.A/B.Lit. DEGREE EXAMINATION
# JUNE 2019.

## Second Year

## இடைக்கால இலக்கியம்

Time : 3 hours Maximum marks : 75

பகுதி அ — ($10 \times 1 = 10$ மதிப்பெண்கள்)

எவையேனும் பத்தினுக்கு ஒரு தொடரில் விடை தருக.

1. சம்பந்தர் 'என் உள்ளம் கவர்கள்வன்' என யாரைக் குறிப்பிடுகிறார்?

2. தாண்டக வேந்தர் – யார்?

3. 'பித்தா' என்று சுந்தரர் யாரை அழைக்கிறார்?

4. நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்தைத் தொகுத்தவர் யார்?

5. மெய்ப்பொருள் நாயனாரின் பகைவனின் பெயர் என்ன?

6. பெரியபுராணம் எச்சொல்லால் தொடங்குகிறது?

7. மெய்ப்பொருள் எந்த ஊரைச் சார்ந்தவர்?

8. குணங்குடியாரின் இயற்பெயர் யாது?

9. குணங்குடியார் கதவு திறக்கப்பாடிய இடம் எது?

10. தமிழின் முதற்காப்பியம் எது?

11. 'மாயப்பொய் பல கூட்டும் மாயத்தாள்' - யார்?

12. சனகன் பெற்ற அன்னம் யார்?

13. குரங்கினத் தவைவன் யார்?

14. தேம்பாவணி யாருடைய வரலாற்றைக் கூறுகிறது?

15. கவுல்மன்னன் எந்நகரை ஆட்சிபுரிந்தான்?

பகுதி ஆ — ($5 \times 2 = 10$ மதிப்பெண்கள்)

எவையேனும் ஐந்தினுக்கு
ஒருபத்தி அளவில் விடை தருக.

16. ஐம்பெருங்காப்பியங்கள் எவை?

17. முற்பிறப்பில் சுந்தரர், அவர்தம் காதலியர் பெயர்களைக் கூறுக.

18. முக்குற்றங்கள் எவை?

19. பெரியாழ்வாரின் சிறப்புப் பெயர்கள் எவை?

20. தத்தனுக்கு நாயனார் இட்ட கட்டளை யாது?

21. மாதவி ஆடிய ஆடல்வகைகளுள் இரண்டனைக் கூறுக.

22. கோலியாத்தை வெல்பவனுக்கு எப்பரிசை வழங்குவதாக மன்னன் அறிவித்தான்?

பகுதி இ — ($5 \times 5 = 25$ மதிப்பெண்கள்)

எவையேனும் ஐந்தினுக்கு
ஒரு பக்க அளவில் விடை தருக.

23. சிவபெருமானின் இயல்புகளாகச் சுந்தரர் கூறுவன யாவை?

24. காலைப்பொழுதின் இயல்புகளாக மாணிக்கவாசகர் உரைப்பன யாவை?

25. கண்ணனுக்கு ஏனைய கடவுளர் அளித்த பொருட்களைக் கூறுக.

26. கோவலன், கண்ணகியை எங்ஙனம் பாராட்டினான்?

27. குணங்குடியார், இறைவனிடம் வேண்டுவன யாவை?

28. வாலியின் வீரச்சிறப்புக்களை உரைக்க.

29. கோலியாத்தின் தோற்றத்தை வருணிக்க.

பகுதி ஈ — ($3 \times 10 = 30$ மதிப்பெண்கள்)

எவையேனும் மூன்றனுக்கு
மூன்றுபக்க அளவில் விடை தருக.

30. மெய்ப்பொருள் நாயனாரின் சிவபக்தித்திறத்தைப் புலப்படுத்துக.

31. குணங்குடியார் இறைவனைப் போற்றும் திறத்தை உரைக்க.

32. கண்ணகி-கோவலன் திருமணக்காட்சியைச் சித்தரிக்க.

33. வாலி இறக்கத் தாரை எங்ஙனம் புலம்புகிறாள்?

34. தாவீதுக்கும் கோலியாத்துக்கும் இடையே நடைபெற்ற போர்க் காட்சியை வருணிக்க.

| UG–023 | BTM–22 |
|---|---|

# B.A./B.Lit. DEGREE EXAMINATION – JUNE 2019

## Second Year

## Tamil

## இலக்கணம் 2 – நம்பியகப் பொருள், புறப்பொருள், வெண்பாமாலை

Time : 3 hours Maximum marks : 75

பகுதி அ — (10 × 1 = 10 மதிப்பெண்கள்)

எவையேனும் பத்து வினாக்களுக்கு விடை தருக.

1. நம்பியகப் பொருளின் ஆசிரியர் யார்?

2. முதற் பொருளில் அடங்குவன எவை?

3. காலங்கள் எத்தனை வகைப்படும்?

4. பாங்கியற் கூட்டத்தின் வகைகள் யாவை?

5. பகற்குறியின் வகைகள் எத்தனை?

6. வரைதல் வேட்கையை உணர்த்துபவர் யார்?

7. வரைவு மலிதல் என்றால் என்ன?

8. உடன் போக்கினை மேற்கொள்பவர் யாவர்?

9. ஓதல் பிரிவுக்குரிய காலம் குறித்து நம்பியகப் பொருள் கூறுவது யாது?

10. புறப்பொருள் வெண்பாமாலையின் ஆசிரியர் யார்?

11. வெட்சித் திணையின் இருபெரும் பிரிவுகள் யாவை?

12. "ஆநிரை மீட்டல்" எந்தப் படலத்திற்கு உரியது?

13. "எயில் காத்தல்" எந்தப் படலம்?

14. வாகைப் படலத்தின் துறைகள் எத்தனை?

15. பாடாண் திணை என்றால் என்ன?

பகுதி ஆ — ($5 \times 2 = 10$ மதிப்பெண்கள்)

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு விடை தருக.

16. இயற்கைப் புணர்ச்சி என்பது யாது?

17. இரவுக்குறி குறித்து விளக்குக.

18. வரைவிடை வைத்துப் பொருள்வயிற் பிரிதல் என்றால் என்ன?

19. உடன்போக்குக் குறித்து விளக்குக.

20. வஞ்சித் திணையின் பொருண்மை யாது?

21. உழிஞைத் திணை என்றால் என்ன? எத்தனை துறைகளை உடையது?

22. பாடாண்திணையின் துறைகள் எவையேனும் மூன்றினைச் சுட்டுக.

பகுதி இ — (5 × 5 = 25 மதிப்பெண்கள்)

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு விடை தருக.

23. ஐவகை நிலத்திற்குரிய பண்களைச் சுட்டுக.

24. பகற்குறி, இரவுக்குறி குறித்து விளக்குக.

25. வரைவிடை வைத்துப் பொருள்வயிற் பிரிதலின் வகைகள் யாவை?

26. வரைவு மலிதல் என்றால் என்ன? வகைகளைச் சுட்டுக.

27. வெட்சிப்படலம் என்றால் என்ன? அவற்றுள் காணலாகும் துறைகள் யாவை?

28. கரந்தைப் படலம் குறித்து விளக்குக.

29. வாகைப் படலம் என்றால் என்ன? துறைகளைச் சுட்டுக.

பகுதி ஈ — (3 × 10 = 30 மதிப்பெண்கள்)

எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடை தருக.

30. பரத்தையிற் பிரிவின் வகைகளை விளக்குக.

31. பாங்கியற் கூட்டம் குறித்து செய்திகளைத் தொகுத்துரைக்க.

32. அறத்தொடு நிற்றல் என்றால் என்ன? அதன் வகைகளைச் சுட்டுக.

33. அக்காலப் போர் முறைகளைப் புறப்பொருள் வெண்பாமாலை வழி விளக்குக.

34. பாடாண் திணை குறித்து எடுத்துரைக்க.

| **UG – 024** | **BTMAL-21** |
|---|---|

# B.A./B.Lit. DEGREE EXAMINATION – JUNE, 2019.

Second Year

Tamil

இதழியல் (சார்புப்பாடம்)

Time : 3 hours Maximum marks : 75

பகுதி அ — (10 × 1 = 10 மதிப்பெண்கள்)

எவையேனும் பத்து வினாக்களுக்கு ஓரிரு தொடரில் விடை தருக.

1. முதன் முதலில் வெளிவந்த இதழின் பெயர் யாது?

2. 'மனோரமா' எந்த மாநிலத்தின் இதழ்?

3. தற்காலத்தில் வெளிவந்த நாளிதழ்கள் இரண்டனை எழுதுக.

4. இதழ்களின் பொதுப்பணிகள் யாவை?

5. மக்களாட்சியில் இதழ்களின் பணி யாது?

6. கோபால கிருஷ்ண கோகலே நடத்திய இதழ்களின் பெயர்களை எழுதுக.

7. தமிழில் வெளிவரும் மாலை இதழ்கள் யாவை?

8. பத்திரிகை அவமதிப்புச்சட்டம் எந்த விதியின் கீழ் அமைகிறது?

9. "இந்திய இதழ்கள் சட்டம்" வெளிவந்த ஆண்டு எது?

10. சமய இதழ்கள் இரண்டனை எழுதுக.

11. மக்களாட்சியில் காணலாகும் இதழ்களின் உரிமைகள் யாவை?

12. ஒரு குறிப்பிட்ட கால இடைவெளியில் இதழ்கள் வருவதை எவ்வாறு அழைக்கிறோம்?

13. தமிழில் நகைச்சுவைக்கு முதலிடம் கொடுத்த இதழ் எது?

14. விளம்பரத்தின் வகைகளைச் சுட்டுக.

15. செப்பனிடும் எழுத்துப் படிகளின் வகைகள் யாவை?

பகுதி ஆ — (5 × 2 = 10 மதிப்பெண்கள்)

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு விடை தருக.

16. தமிழ் இதழ்களின் பெயர்கள் எவையேனும் நான்கினைச் சுட்டுக.

17. இதழ்களின் பணிகள் யாவை?

18. பத்திரிக்கைச் சட்டம் எவையேனும் இரண்டினைச் குறிப்பிடுக.

19. செய்தியாளருக்கான தகுதிகள் யாவை?

20. உலகச் செய்தி நிறுவனங்கள் இரண்டினைக் கூறுக.

21. 'தலையங்கம்' என்றால் என்ன?

22. செய்தியின் அமைப்பினைச் சுட்டுக.

பகுதி இ — (5 × 5 = 25 மதிப்பெண்கள்)

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு விடை தருக.

23. முதல் செய்தித்தாள் எது? விளக்குக.

24. இதழ்களின் பணிகள் யாவை? விளக்குக.

25. இதழ்களின் அவமதிப்புச் சட்டம் பற்றி எழுதுக

26. NEWS என்றால் என்ன? விளக்குக.

27. உலகச் செய்தி நிறுவனம் ஒன்றினை விளக்குக.

28. இதழியலில் ஆசிரியர் பெறும் இடத்தைச் சுட்டுக.

29. பக்க வடிவமைப்பு என்றால் என்ன?

பகுதி ஈ — (3 × 10 = 30 மதிப்பெண்கள்)

எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடை தருக.

30. உனக்குத் தெரிந்த தமிழ் இதழ்களை வகைப்படுத்தி எழுதுக.

31. விடுதலை இயக்க இதழ்கள் பற்றி எழுதுக.

32. இதழ்களின் வகைகள் குறித்து எழுதுக.

33. செய்தியைச் செப்பனிட்டு வெளியிடும் முறையில் அதன் முக்கியத்துவத்தை எழுதுக.

34. இதழியில் விளம்பரம் குறித்து நீ அறிந்தவற்றை தொகுத்து எழுதுக.

———————